RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1961

OPEN ACCESS

# கலித்தொகை சுட்டும் மகளிரின் வாழ்வியல் அறங்கள்

ஞா. கார்த்திகா [அ, *], நா. தனராஜன் [ஆ]

[அ] தமிழ்த்துறை, ம.இரா. அரசு கலைக் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது), மன்னார்குடி-614001, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பேராவூரணி-614804, தமிழ்நாடு, இந்தியா

# The Life Virtues of Women in Kalithogai

G. Karthika [a, *], N. Dhanarajan [b]

[a] Department of Tamil, M.R. Government Arts College (Affiliated to Bharathidasan University), Mannargudi–614001, Tamil Nadu, India

[b] Department of Tamil, Govt Arts and Science College, Peravurani-614804, Tamil Nadu, India

* Corresponding Author: karthika2161992@gmail.com

Received: 09-09-2022
Revised: 30-10-2022
Accepted: 14-11-2022
Published: 10-12-2022

## ABSTRACT

Tamil is the world's oldest language. Tamil language has achieved high status and excellence, the reason behind it is the concept of virtue in grammar texts and other literary resources. Tamil peoples are welcomed all around the world because of these things that have been set up in the best way. Many writers still today learn the literary texts of Sangam literature which contains great moral ideas. In particular, Thirukkural, Naladiyar, etc. are considered as the best books. Ettuthogai, a classical Tamil poetic work, each anthology in this work has a story line. In particular, among the eight books of Ettuthogai, Kalithogai is the best book. The book is about the joys and sorrows between husband and wife. Each song in it points out the natural environment and human dignity. The ancient kings approached nature and experienced the romantic feelings of the common people and had sung beautiful songs. 'Balaikali' sung by Cheramannan Perungatungo and Mullaikali songs sung by Cholan Nalluruthiran proves it. Perungadungo's songs are the parables about people's life, and about morality. Perungadungo makes it very clear that it is not possible to find happiness in life only with material things. In this way, the virtues of the lovers of the Kalithogai has been highlighted.

**Keywords:** Kalithogai, Women, Tamil Language, Grammar

## முன்னுரை

பாட்டும் தொகையும் எனப் போற்றப்படும் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் தமிழரின் வாழ்க்கையை உள்ளங்கை நெல்லிக்கனியைப் போலக் காட்டுபவை ஆகும். இதனுள் பாவகையால் பெயர்பெற்ற நூல் கலித்தொகை. 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்றும் கல்வி வலார்கண்ட கலி என்றும் அழைக்கப்படும் சிறப்பிற்குரியது.

'திருத்தகு மாமுனி சிந்தாமணி கம்பன்

விருத்தக் கவி வளமும்; வேண்டோம் - திருக்குறளோ

கொங்குவேள் மாக்கதையோ கொள்ளோம்றளி - ஆர்வோம்

பொங்கு கலி இன்பப் பொருள்'

தலைவனும், தலைவியும் அன்பின் எழுச்சி சார்ந்த தகைமையோடு வாழ்ந்ததைக் கூறுகின்றது கலித்தொகை. கன்னியொருத்திக்கும், காளையொருவனுக்கும் இடையே முகிழ்த்து வளர்ந்து மணம் நிறைக்கும் காதல் அன்பே ஆகும். தலைவன் தலைவியிடையே ஏற்படும் இன்பமும், துன்பமும், களிப்பும், கலக்கமும், இணைந்து அவர்கள் வாழ்வியலை உருவாக்குகின்றன. ஐவகை நிலத்திலும் வாழ்ந்த தலைவனும் தலைவியும், என்னென்ன வாழ்க்கை அனுபவங்களை பெறுகிறார்கள் என்பன குறித்தும், அவர்களின் காதல் நெறிகள் எத்தன்மை வாய்ந்தவை என்பது பற்றியும் இக்கட்டுரையில் காணலாம் (Varatharasan, 1972).

பெண் என்று பிறந்துவிட்டாலே அவள் பேசப்படுபவளாக, வாதிக்கப்படுபவளாக, பிரச்சனைக்குரியவளாகக் கருதப்படுகிறாள். பெண்ணின் பிறப்பு, கல்வி, பாதுகாப்பு திருமணம் என்று அனைத்துமே பட்டிமன்றத் தலைப்பாக்கப்பட்டுவிட்டன. கலாச்சார விஷயங்கள் ஒரு தெளிந்த நீரோடையைப் போல் பெண்மையை ஒரு வாதத்திற்குரிய பொருளாக்கி விடுகிறது. பெண்களின் முன்னேற்றத்தினை அகம் புறம் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவற்றுள் அகவாழ்வான காதல் ஒழுகலாறுகளை கலித்தொகை வாயிலாக அறியமுடிகிறது. காதல் வாழ்வினில் சிறப்புற்று விளங்கும் பெண்கள் எத்தகைய அறங்களையெல்லாம் கொண்டு வெளிக்காட்டப்படுகிறாள் என்பதே சிறப்பு. இதனை வள்ளுவர்

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்

திண்மையுண் டாகப் பெறின்"

என்று வள்ளுவப் பெருந்தகை வியந்து போற்றியுள்ளார் (Varatharasan, 2016). ஆம் 'இல்வாழ்வு நெறியே பொருள்' எனக்கொள்ளும் பாலைநிலத் தலைவியின் சிறப்பு மேலோங்கி காணப்படுகிறது.

## வாழ்க்கைக்கு பயன்படும் அறங்கள்

உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்தும் ஏதாவது ஒரு முறையில் அறச்செயலை செய்து வருகிறது என்பது இறைவன் படைத்த நியதி ஆகும். அவ்வகையில் மனிதன் தோன்றிய பிறகு தன்வாழ்நாளில் தம்மால் இயன்ற வரை பிறருக்கு உதவியும், பொருள்களை கொடுத்தும் தன் ஈகைப்பண்பை வெளிப்படுத்துவது போன்றவை அறமாக கருதப்பட்டாலும் இல்லறத்தில் அறம் என்பது, குடும்பப்பெருமையையும், குலமகளிரின் கற்பின் சிறப்பையும் வெளிப்படுத்தும் விதமாக அமைவதே சிறந்த அறமாக கருதப்படுகிறது. குறிப்பாகச் சொன்னால் ஒருவரையொருவர் காதலித்த தலைவனும் தலைவியும் கற்பு நெறி பிறழாமல் திருமண வாழ்க்கையில் தங்களை இணைத்துக் கொள்வதே இல்லறத்தில் சிறந்த அறமாகக் கருதப்படுகிறது. இதனை கலித்தொகையில் வாழ்ந்த மகளிர் ஒவ்வொரு திணையிலும் சிறந்த அறக் கருத்துக்களை கூறுபவர்களாக கூறப்பட்டுள்ளனர். இதனை வள்ளுவர் குறள்வழி அறியலாம்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற"

மனத்தில் எந்த ஒரு குற்றமும் சஞ்சலமும் இல்லாமல் இருத்தலே சிறந்த அறமாகும் மற்றவை ஆடம்பரத்தன்மையுடையன என்றும் வாழ்க்கைக்கு தேவையில்லாதவை என்றும் குறிப்பிட்டுள்ளார் (Varatharasan, 2016). இது போன்று பெண்ணின் பெருமை பேசிய திரு.வி. க அவர்களும், புதுமைப் பெண்களைப் படைத்துக் காட்டிய மகாகவி பாரதியார் அவர்களும் பெண்பிறவியைப் பெரும் பிறவியாகப் போற்றியுள்ளனர். காரணம், பெண்கள் அறத்தின் கண்கள் போன்றவர்கள். ஆம், ஒரு இல்லத்தின் இனிமை பெண்ணிடத்திலே உள்ளது இதுவே உண்மை. பெண்ணின் பிறப்பு முதல் இறப்பு வரை அவளது ஒவ்வொருபடி முன்னேற்றமும் வாழ்க்கைக்கு பயன்படும் அறக்கருத்துக்களாக அமைந்துள்ளது.

## காதலும் கற்பு நெறிகளும்

கலித்தொகையில் தலைவனும், தலைவியும் காதல் வாழ்க்கையில் உண்மைத் தன்மையுடன் இருந்தமையை விளக்குவதாக இப்பகுதி அமைகின்றன. தலைவியின் கற்பு மேம்பாட்டினை பாலைக்கலியில் 'தொல்லியல் வழாமைத் துணை எனப் புணர்ந்தவள் (1-21) என்றும் தோழி கூறுவதிலிருந்து தலைவி நிலைபெற்ற கற்புடையவள் என்பதும், வடமீனைப் போல பலரும் தொழுது போற்றும் உயர்ந்த கற்புடையவள் என்பதும் பெறப்படுகிறது. குறிஞ்சிக்கலியில் தலைவியை 'அருமழை தரல் வேண்டின் தருசிற்கும் பெருமையளே என்று (3:6) கபிலர் குறிப்பிடுகிறார்.

## சங்க காலத்திய பெண்களின் அறநிலைகள்

சங்க காலத்தில் பெண்களுக்கு கல்வி உரிமை இருந்தது. முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற்புலவர்கள் வாழ்ந்துள்ளனர். குயவர் குலப் பெண்ணும் பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப் பெண்டும் பாப்புனையும் ஆற்றல் பெற்றிருந்தனர். அவை அரசியல் பணி புரிந்ததையும் அறிய முடிகின்றது. இரட்டைக் காப்பியங்களில் தமிழ்ப் பெண்ணியத்திற்கான கூறுகளைக் கண்ணகி, மாதவி, மணிமேகலை முதலான பாத்திரங்கள் வழியே இடம்பெறச் செய்தனர்.

மணிமேகலையும் தன் உயர்ந்த மதிநுட்பத்தால் பிற சமயச் சொல்லாடல்களுக்கு எதிராக வாதிட்டுத் தனது மெய்யியலை நிறுவுவதாக மேகலை கூறும். சங்க காலத்தில் தமிழ்ப் பெண்ணிடம் அகமும், புறமும் பேசக்கூடிய அறவாழ்க்கைக்கு வித்தாக அமைந்தன.

## சங்ககாலத்திற்குப்பின் பெண்ணியமும் அறமும்

சங்க காலத்திற்குபின் அறநெறி இலக்கியம் தோன்றிய காலத்தில் பெண்ணானவள் நிலவுடைமைச் சமூக அமைப்பிற்கேற்ப உருவாக்கப்படுகிறாள். சாதிய நிலவுடமை மதிப்பீடுகள் கொடிகட்டிப் பறந்த நிலையில் தமிழ்ப் பெண்ணியம் இருந்த இடம் தெரியாமல் எங்கோ பாமரமக்கள் வாழும் குடில்களில் பதுங்கி வாழ்ந்தது. கண்ணகி, மணிமேகலை கதைகள் ஓரங்கட்டப்பட்டுப் பாஞ்சாலி, சீதை, சாவித்திரி, நளாயினி, சந்திரமதி, தமயந்தி, சகுந்தலை கதைகளின் மூலம் இந்துப் பெண்ணிய மதிப்பீட்டுக் கட்டமைப்பு ஓர் குறுக்கமான கட்டுண்ட அமைப்பாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பாரதிதாசன், கண்ணகி புரட்சிக்காப்பியம், மணிமேகலை வெண்பா முதலான படைப்புகளில் தமிழ்ப் பெண்ணியத்தை மீட்டுருவாக்கம் செய்துள்ளார். இவ்வாறு ஒவ்வொரு காலக்கட்டத்திலும் சிறந்த அறக்கருத்துக்களை பறைசாட்டுபவர்களாக பெண்கள் மதிக்கப்பட்டுள்ளனர்.

## கடவுளும் கற்பும்

கற்புடைய பெண்ணைச் சங்ககால மக்கள் தெய்வத்திற்கு நிகராகப் போற்றினர். தலைவன் பொருளீட்டப் போகும் வழியின் அருமையை எண்ணித் தலைவி வருந்துகிறாள். தோழி அவளிடம் தலைவன் நலம் வேண்டி மழையையும், வெம்மையையும், காற்றையும் நீ உன் கற்பின் மேன்மை காரணமாக அக்கடவுளின் உதவியைப் பெறுவாய் என்று கூறுவதை

'தெய்வத்துத் திறன் நோக்கித்தெருமரல் தேமொழி

வறன் ஓடின் வையகத்து வான்தரும் கற்பினாள்

திறன் ஓடிப் பசப்பூர்தல் உண்டு என

அறன் ஓடி விலங்கின்று அவர் ஆள்வினைத் திறத்தே'

என்னும் கலித்தொகை அடிகள் சுட்டுகின்றன (Viswanathan, 2007).

## கலித்தொகை காட்டும் சமூக அறன்

களிற்றையும் அடக்கும் ஆற்றல் இசைக்கும் உண்டு என்ற உண்மையும், நீராடல் பற்றிய செய்தியும், மக்களின் நல்வாழ்விற்கான நெறிகளும் கலியில் விளக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. மடலேறுதல், பொருந்தாக்காமம், ஒருதலைக்காமம், ஆகியன பற்றிய செய்திகள் அதிகமாகக் காணப்படுகிறது. மக்கள் காமனை தெய்வமாக வழிபட்டு வந்தமை என்ற செய்தியால், மக்கள் எந்த செயலிலும் ஒரு அறத்தினை வேண்டுபவர்களாக இருந்தனர் என்பது தெளிவாகிறது. ஆம் ஒரு செயலை அல்லது தொழிலை செய்யும் முன் இறைவனை வழிபடும் நியதி சங்ககாலத்தில் பறைசாட்டப்பட்டது உண்மை. இதுபோன்று இல்லற வாழ்வினில் தலைவனும், தலைவியும் ஒருவரையொருவர் புரிந்துக் கொண்டு இன்புற்று வாழ வேண்டும் என்ற காரணத்திற்காக காமன் வழிபாட்டு முறையும் இருந்துள்ளது தெய்வ வழிபாட்டின் அறநெறியினை வெளிகாட்டுகிறது. இவ்விதம் சமூக வாழ்க்கை அமைகின்றது.

## பாலைக்கலி மகளிரின் கற்பு கோட்பாடு

கற்பு என்பதற்கு அகராதியில் கல்விஇ, அறிவு, முல்லைக்கொடி, கதி, மகளிர்கற்பு எனப்பல பொருள்கள் கூறப்பட்டுள்ளன. இங்கு மகளிர் கற்பு என்பது

“தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்”

என்ற குறளில் வள்ளுவர், பெண் என்பவள் தன்னைக் காத்துக்கொண்டு, தன் கணவனையும் அவளின் குடும்ப புகழினையும் குறையாமல் பார்த்துக் கொள்பவளே என்று கூறுகிறார் (Varatharasan, 2016). பெண்ணின் அழகையோ, அவளின் பண்பையோ பேசாத இலக்கியங்களும் இல்லை. உலகப் பொதுமறையாம் திருக்குறள் பெண்ணின் பெருமையை மிகுதியாக எடுத்துரைக்கிறது.

பாலைக்கலியின் முதற்பாடலிலேயே கற்பின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

“தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக,

அடங்காதார் மிடல்சாய, அமரர்வந்து இரத்தலின்,

மடங்கல்போல் சினை, மாயம்செய் அவுணரைக்

கடந்து அடு முன்பொடு, முக்கண்ணன் -மூவெயிலும்

தொல்கவின் தொலைதல் அஞ்சி, என்

சொல்வரைத் தங்கினர் காதலோரே”

இப்பாடலில் ஈதல் இசைபட வாழ்தலே’ என்றாலும், பிறருக்கு இறங்கி ஈவதாகச் சொல்பவன் (Viswanathan, 2007), தன் உயிர்த்துணையான மனைவிக்கு ஏற்படும் துயரினைக் கருத வேண்டவோ என்று சொல்வது இது. இல்வாழ்விலே நுகர்தற்குரியதான கட்டிளமைப் பருவத்திலே, கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பிரியாது வாழ்தல் ஒன்றே பிற செல்வத்திலும் புகழினும் சிறந்ததாகும் என்ற நெறியை வற்புறுத்துகிறது.

## மழை பெய்விக்கும் கற்பு

உலகமே வறட்சியால் வாடிய போதிலும் மழையை பெய்விக்கும் கற்பு சக்தி உடையவள் இவன் தலைவி என்று கலித்தொகைச் சுட்டிக் காட்டுகிறது. இதனை

“வறன் ஓடின் வையகத்து

வான் தரும் கற்பினாள்”

என்றும் கலித்தொகை பாடல்வரி விளக்கும் (Viswanathan, 2007). இத னை மெய்பிக்கும் வகையில் திருவள்ளுவர். கற்புடைய பெண் தெய்வத்தைக் கூட தொழமாட்டாள். அவள் கணவனையே தெய்வமாக வணங்கிச் சிறப்படைவாள். அப்படிப்பட்டவள் சொன்னால் மழை பெய்யும்படியான தெய்வபலம் உடையவள் என்கிறார்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை" (Varatharasan, 2016)

## குறிஞ்சி நில மகளிரின் அற வாழ்க்கை முறை

இயற்கையின் எழிலே பரிபூரணமாக ஒளிவீசிக் கொண்டிருக்கும் குறிஞ்சி நிலத்திலே வாழக்கூடிய தலைவனும், தலைவியும் காதல் வாழ்விலே சேர்ந்து வாழ்கின்றனர். ஆனால் இந்நிலையினை தோழி முற்றிலும் ஏற்றுக்கொள்ளவில்லை காரணம் என்னவென்றால், தலைவன் திருமணமாகாமலே இரவிலே வந்து தலைவியுடன் கூடி மகிழ்ந்திருந்து விட்டுச் செல்வது, தலைவிக்கு பெரும் பலிச் சொல்லாகக் கூடும் என எண்ணினால், இதனை குறிப்பினால் உணர்த்துகிறாள்

"கயமலர் உண்கண்ணாய்! காணாய் ஒருவன்

வயமான் அழத்தேர்வான் போலத் தொடைமாண்ட

ஒண்குழாய்! செல்க எனக் கூறிவிடும் பண்பின்

அங்கன் உடைய அவன்"

தோழியானவள் அறத்தினை வலியுறுத்துபவளாக குறிப்பிடப்படுகிறாள். இதனை வள்ளுவர் குறள் வழி அறியலாம் (Viswanathan, 2007).

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்

முயல்வாருள் எல்லாம் தலை"

ஒருவன் கடவுளை அடைய விரும்புவனாக இருப்பதை விட மனைவியோடு கூடிய வாழ்க்கையை அதற்குரிய இயல்புகளோடும் நெறியோடும் வாழ்பவனே முதன்மையானவன் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் (Varatharasan, 2016).

தோழியின் கூற்றை ஏற்பவளாக தலைவி, தலைவனிடம் விரைந்து தம்மை திருமணம் செய்ய வேண்டும் எனக் கூறுகிறாள். இவ்விதம் களவொழுக்கத்தில் மட்டும் வாழாமல் கற்பொழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும் என்ற உயர்ந்த நெறியினை கொண்டவர்களாக வாழ்ந்தனர்.

## முல்லை நிலமகளிரின் கற்பு நெறியும் காதலர் அறமும்

முல்லை மலரைப்போல எவரையும் கவரும் இலக்கிய மணம் செறிந்து, அதனை எங்ஙனம் பரப்புவன இச்செய்யுட்கள் என்றே கூறலாம்.

"சந்தனம் மலையிற் பிறந்தாலும் முத்து கடலில் பிறந்தாலும், இசையாழிற் பிறந்தாலும் பிறந்த இடத்திற்கு எந்த பயனும் தருவதில்லை. அதுபோல் பெண்பிள்ளைகளால் திருமணத்திற்குப்பின் பிறந்த வீட்டிற்கு எந்தப் பயனும் இல்லை. என்பதை கலித்தொகை குறிப்பிடுகிறது.

ஆயர்குலப்பெண்கள் தன்னை திருமணம் செய்யும் ஆடவர் ஏறுதழுவுதலில் வென்றவராக இருத்தல் வேண்டும் என எண்ணினார்கள். வீரத்திற்கு முக்கியத்துவம் அளித்தனர். ஏறு தழுவுதலில் வென்று வரும் தலைவன் மீது காதல் கொண்டு அவனை மணம் செய்து கொள்ள இசைவு தெரிவிப்பவளாக முல்லை நில மகளிர் வாழ்கின்றனர்.

"மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வௌவலின்,

மெலிவின்றி மேற்சென்றுஇ மேவார்நாடு இடம்படப்

ஒருமொழி கொள்க, இவ்வுலகுடன்", எனவே (Viswanathan, 2007)

இதனை தொல்காப்பியர்

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு

உருவு நிறுத்த காமவாயில்

நிறையே அருளே உணர்வொடு திருவென

முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

குலபிறப்பு முதல் உயர்தன்மை வரை பத்து பொருத்தங்கள் இருபாலருக்கும் ஒத்து இருக்கும் போது, காதல் ஒழுக்கத்தின் இயல்பு நிலை சிறப்புறும் என்கிறார் தொல்காப்பியர் (Viswanathan, 2007). இது மட்டுமல்லாது காதல் நிகழ்வுகள் திருமணத்திற்கு பின்னரான வாழ்க்கை முறையினை பண்டைகால காதல் நிகழ்வுகளை பெரும்பகுதி சுட்டிக்காட்டியுள்ளார். "களவு" என்று பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பது போன இயற்கை மணமுறை முல்லை நிலத்தில் சிறிது சிறிதாக மாறி "கற்பு" மணம் ஏற்பட்டது. என்ற செய்தியின் வழியாக முல்லை நிலத்தில் கற்பு நெறியும், காதல் ஒழுகலாறுகளும் தன் நிலைப்பாட்டில் இருந்து சிறிதும் மாறவில்லை என்றே கூறலாம். ஆக ஒழுக்கமாகிய இன்பத்தின் சிறப்பிலக்கணத்தை கூறும் முகமாக 'களவியலை' அமைத்துள்ளார் தொல்காப்பியர் என்றே கூறலாம்.

இவ்வாறு முல்லை நில தலைவனும், தலைவியும் தங்களது காதல் நெறியில் பிறழாமல் திருமண வாழ்க்கை முறையை அடைவதை தங்களது அறமாகக் கருதினர்.

## மருதநில மகளிரும் மனையியல் அறமும்

வயல் வளமும் நீர் வளமும் மிகுந்த பகுதியில் வாழும் மருத நிலமகளிர் காதல் கற்பில் சிறந்தவர்களாக தன் குடிமரபின் பெருமையை வாழ்விப்பவளாக இருப்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

'வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட

ஞாங்கர் மலர்சூழ்ந்து, ஊர்புகுந்த வரிவண்டு,

ஒங்குயர் எழில்யானைக் கனைக்கடாம் கமழ்நாற்றம்

நீட்டித்தாய் என்று, கடாஅம், கடும் திண்தேர்

பூட்டு விடாஅ நிறுத்து"

இப்பாடலில் கணவன் பரத்தையரோடு கூடிக்கலந்து இன்புற்று வீடு திரும்பும் கணவனை சிறிதும் கோவம் கொள்ளாமல், நீ வந்ததே போதும், உன்னை நினைத்து பரத்தையர் வருந்துவார்கள் அங்கேயே மீண்டும் போய் வருக எனக் கூறும் வேலையில் தலைவி தன்குடி சிறப்பினை காப்பவளாகவும், இல்லறத்தில் சிறந்தவளாக இருந்ததன் உண்மைத் தன்மையையும் அறியமுடிகிறது (Viswanathan, 2007).

"நின்ற சொல்லர் நீடு தோன்று இனியர்

என்றும் எண்தோள் பிரிபறியலரே"

தலைவன்பால் மிக்க அன்பு கொண்ட தலைவி, அவனிடம் குறைபாடு கண்டபோதும் அதனைப் பெரிதுப்படுத்தவில்லை (Varatharasan, 1972). களவு வாழ்வில் அவனோடு கூடி வாழ்ந்ததையும் அவளது பெருமைகளையும்

எண்ணி அவனே மறுபிறப்பிலும் கணவனாக வேண்டும் எனக் கூறும் உள்ளம் நினைக்கத்தக்கதாக அமைவது, பெண்ணின் குடிப்பிறப்பினை உயர்வடையச் செய்வதாக அமைகிறது.

## அறத்தின் நிலை தவறாது நிற்கும் நெய்தல் நிலமகளிர்

கடலும் கடற்கரையும் என்றும் இரண்டானும் வாழும் மக்களின் தொடர்பாக அமைந்தது நெய்தற்கலி.

'வெல்புகழ் மன்னவன், விளங்கிய ஒழுக்கத்தால்

நல்லாற்றின் உயிர்காத்து, நடுக்கறத் தான்செய்த

உள்ளாது அமைந்தேன், உள்ளும்,

உள்இல் உள்ளம், உள்உள் உவந்தே'

களவுக்காலத்தே, தலைவியை பிரிந்து சென்றான் காதலன் பேதுற்றாள் அவள், வருந்தி வருந்தி நலிந்தாள், மாலைக்காலமும் வந்தது, மந்தைகளும் வீடு திரும்பின. பறவைகளும் வீடு திரும்பின. அவள் உள்ளம் வீடு திரும்பாத கணவனை நினைத்து உருகுகிறது. மாலையை நினைத்து மனம் வருந்திப் பேசுகிறாள் தலைவி. இருந்தபோதிலும் தன் (கணவன்) தலைவன் விரைவில் திரும்பி தன்னை கான வருவான் என்ற மனஉறுதியுடன் தன் காதலில் குறைவின்றி இருப்பவள் தலைவி. தன் தலைவனை விட்டு பிறிதொரு ஆடவனை தன் மனதால் கூட ஏற்காத கற்பில் சிறந்த மகளிரை உடையது கலித்தொகை (Viswanathan, 2007).

நெய்தற்கலியானது அறிவுச்சுரங்கமாகவும் நிதியினை உரைக்கும் அறநூலாகவும் விளங்குகிறது. ஒன்பது சிறந்த மனிதத் தன்மைகள் வேண்டும். அவை, 1. ஆற்றுதல் என்பது - அலந்தவர்க்கு உதவுதல், 2. போற்றுதல் என்பது - பணர்ந்தாரைப் பிரியாமை, 3. பொறையெனப்படுவது - போற்றாரைப் பொறுத்தல், மனவாழ்வின் அடித்தளமான நவ அறங்கள் இவை ஆகும். நம்வாழ்வு சிறப்புற்று விளங்கிட இத்தகைய அறங்கள் போதும்.

## முடிவுரை

அறன் என சொல்லப்படுவது இல்வாழ்க்கையேயாகும். அவ்வாழ்க்கை பிறரால் பழிக்கப்படாமல் அமைவது மிகநல்லது என்று திருக்குறள் கூறுகிறது. அதுபோல் கலித்தொகையில் பெண்ணின் அறம் என்பது பெண்ணின் குடிபிறப்பு, காதல் வாழ்வு, திருமணஉறவு, தோழியின் நட்பு, காதல்உறுதித்தன்மை, குடிப்பெருமையின் சிறப்பு முதலானவற்றை காப்பவளாகவும், சிறந்த ஒழுக்கநெறியில் நின்று பெண்குலத்தை உயர்வடையச் செய்யும் நல்ல அறங்களை மக்களுக்கு உணர்த்துபவளாகவும் போற்றப்படுகிறாள். இத்தகைய நல்லநெறியில் நின்று சிறந்த அறக் கருத்துக்களை விளக்குபவையாக கலித்தொகை அமைகின்றது.

## References

Varatharasan, M. (1972) Tamil Ilakkiya Varalaru, Paari niliyam, Chennai, India.

Varatharasan, M. (2016) Thirukkural, Paari Nilaiyam, Chennai, India.

Viswanathan, A. (2007) Kalithogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License